# 3.7 அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிதல்

**வேத வசனம்:** உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். எபி. 13:17

**அறிக்கை:** தேவன் நமக்கு மேல் அதிகாரிகளை ஏற்படுத்தியது, நாம் அவர்களுக்குப் பணியவே

**சத்தியம்:** தேவன் ஏற்படுத்திய அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்குச் சமம். நாம் அவர்களை எதிர்க்கும்போது ஆண்டவராகிய தேவனை எதிர்க்கிறோம்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *கீழ்ப்படிதல் மக்களுக்கு ஏன் கடினமாக உள்ளது?*
- *கீழே இருப்பவர்கள் மேலே இருக்கும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் ஏன் முக்கியம்?*
- *கொலோ 3:20, எபி. 13:17, 1 பேது 2:13, எபே. 6:5-8 - இதில் யாருக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது?*

## பாடக்குறிப்புகள்

- **அடிபணிவதின் ஐந்து "கண்டிப்பாக நான்"**
- **கீழ்ப்படிதல் தேவனின் கட்டளை** - *1 பேதுரு 2:13, 5:5, கொ.3:20*
- **தேவன் அதிகாரிகளை நியமிக்கவும் உபயோகிக்கவும் செய்கிறார்** - *எசே. 34:23-24, லூக்காக 10:14*
- **மனிதன் இயற்கையில் அடிப்பணிகிறவன் அல்ல** - *ஏசாயா 53:6*

## வேதப்பகுதி

*கொலோசெயர் 3:17-24*

## ஆம் சொல்லுதல்

*ஒரு கதவின் பூட்டிற்கு ஐந்து சாவிகள் தேவை என்று கற்பனைச் செய்து கொள்ளுங்கள். அதேபோல கீழ்ப்படிதலுக்கு ஐந்து அம்சங்கள் உள்ளன. 1.விரைவாக, 2.உற்சாகமாக, 3.நிறைவாக, 4.மனமுவந்து, 5.தேவைக்கு அதிகமாகச் செய்தல். தேவன் நமக்கு உதவவும், வழிகாட்டவும், கற்றுக்கொடுக்கவும் நமக்கு மேல் நியமித்தவர்களுக்கு நாம் ஆம் என்று சொல்லும்போது நாம் தேவனுக்கு ஆம் சொல்லுகிறோம். நமக்கு 1.விரைவாக, 2.உற்சாகமாக, 3.நிறைவாக, 4.மனமுவந்து, 5.தேவைக்கு அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கட்டாயம் இருக்க வேண்டும். உங்களுக்கு மேல் நியமிக்கப்பட்ட ஒருவரை நினைத்துப் பாருங்கள். தேவன் அவரை உங்களுக்கு உதவ எவ்வாறு பயன்படுத்துகிறார்? அதை இந்த முக்கோணத்திற்குள் எழுதுங்கள்.*




## சிந்திக்க:

*யாருக்குக் கீழ்ப்படிவது உங்களுக்குக் கடினமாக உள்ளது. அவருடைய அதிகாரத்துக்கு எளிமையாக அடிப்பணிய நீங்கள் என்ன செய்யலாம்?*

## ஜெபம்:

*தேவனிடத்தில் அவரைப் பின்பற்றவும் அவருக்குக் கீழ்ப்படியவும் தைரியம் வேண்டி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.*

## செயல்

**சரியானத் தேர்வைச் செய்ய துணிச்சலும் தைரியமும் தேவைப்படுகிறது. அடுத்த முறை சோதனையை உங்களால் எதிர்க்க இயலும்போது தேவன் தந்த பெலனுக்காக நன்றி சொல்லுங்கள்.**